இனிமையான குழந்தைகளே! இந்தப் புருஷோத்தம சங்கமயுகம் மாற்றம் ஏற்படுத்துவதற்கான (டிரான்ஸ்ஃபர்) யுகம். இப்போது நீங்கள் தாழ்ந்த நிலையில் இருந்து உயர்ந்த ஆத்மாவாக ஆக வேண்டும்.

கேள்வி: பாபாவுடன் கூடவே எந்தக் குழந்தைகளின் மகிமையும் பாடப்படுகின்றது?

பதில்: யார் ஆசிரியராகி அநேகருக்கு நன்மை செய்வதற்கான நிமித்தமாக ஆகியிருக்கிறார்களோ, அவர்களின் மகிமையும் பாபாவுடன் கூடவே பாடப்படுகின்றது. செய்பவர்-செய்விப்பவராகிய பாபா குழந்தைகள் மூலமாக அநேகருக்கு நன்மை செய்விக்கிறார். ஆகவே குழந்தைகளுக்கும் மகிமை ஆகி விடுகின்றது. குழந்தை கள் சொல்கின்றனர் - பாபா, இன்னார் என் மீது தயை காட்டினார், அதனால் நான் எதிலிருந்து என்னவாக ஆகி விட்டேன்! ஆசிரியர் ஆகாமல் ஆசிர்வாதம் கிடைக்காது.

ஓம் சாந்தி. ஆன்மிகத் தந்தை ஆன்மிகக் குழந்தைகளிடம் கேட்கிறார். புரிய வைக்கவும் செய்கிறார். பிறகு கேள்வி கேட்கவும் செய்கிறார். இப்போது குழந்தைகள் தந்தையை அறிந்து கொண்டு விட்டனர். சிலர் அவரை சர்வவியாபி எனவும் சொல்கின்றனர். ஆனால் அதற்கு முன் தந்தையை அறிந்து கொள்ளவோ வேண்டும் அல்லவா? - தந்தை யார்? அறிமுகம் கொடுத்து பிறகு சொல்ல வேண்டும், தந்தையின் இருப்பிடம் எங்கே உள்ளது? தந்தையை அறிந்து கொள்ளவே இல்லை என்றால் அவருடைய இருப்பிடம் பற்றி எப்படித் தெரியும்? அவரோ பெயர்-வடிவத்திற்கு அப்பாற்பட்டவர், அதாவது அப்படி எதுவும் கிடையாது எனச் சொல்லி விடுகின்றனர். ஆக, எந்த ஒரு பொருள் இல்லையோ, அதன் இருப்பிடம் பற்றியும் எப்படி சிந்திப்பது? இதை இப்போது தான் குழந்தை கள் நீங்கள் அறிந்து கொண்டீர்கள். பாபா முதல்-முதலிலோ தம்மைப் பற்றிய அறிமுகம் கொடுத் துள்ளார். பிறகு இருப்பிடம் புரிய வைக்கப்படுகின்றது. பாபா சொல்கிறார், நான் இந்த இரதத்தின் மூலம் அறிமுகம் கொடுப்பதற்காக வந்துள்ளேன். நான் உங்கள் அனைவருடைய தந்தை, நான் பரமபிதா பரமாத்மா எனச் சொல்லப்படுகின்றேன். ஆத்மாவைப் பற்றியும் யாருக்கும் தெரியாது. தந்தைக்கு பெயர், வடிவம், தேசம், காலம் கிடையாது என்றால் குழந்தைகள் (ஆத்மா) எங்கிருந்து வந்தனர்? தந்தையே பெயர்-வடிவத்திற்கு அப்பாற்பட்டவர் என்றால் குழந்தைகள் பிறகு எங்கிருந்து வந்தனர்? குழந்தைகள் இருக்கின்றனர் என்றால் நிச்சயமாகத் தந்தையும் இருக்கிறார். குழந்தை களுக்கும் பெயர்-வடிவம் உள்ளது - எவ்வளவு தான் சூட்சுமமாக இருந்தாலும் சரி. குழந்தைகள் வர்ணனை செய்கின்றனர், அற்புதமான நட்சத்திரம், அவர் இவருக்குள் பிரவேசமாகிறார். இவர் ஆத்மா எனச் சொல்லப்படுகிறார். தந்தையோ இருப்பது பரந்தாமத்தில். அது வசிப்பதற்கான இருப்பிடம். மேலே பார்வை செல்கிறது இல்லையா? மேலே விரலால் சமிக்ஞை செய்து நினைவு செய்கின்றனர். ஆக, நிச்சயமாக யாரை நினைவு செய்கின்றனரோ, அவர் ஏதேனும் ஒரு பொருளாக இருக்க வேண்டும். பரமபிதா பரமாத்மா எனச் சொல்லவோ செய்கின்றனர் இல்லையா? பிறகும் பெயர்-வடிவத்திற்கு அப்பாற் பட்டவர் எனச் சொல்வது அஞ்ஞானம் எனப்படும். தந்தையை அறிந்து கொள்வது ஞானம் எனச் சொல்லப் படும். இதையும் நீங்கள்

புரிந்து கொண்டிருக்கிறீர்கள், நாம் முதலில் அஞ்ஞானியாக இருந்தோம். தந்தை பற்றியும் அறியாமல் இருந்தீர்கள், தன்னைப் பற்றியும் அறியாதிருந்தீர்கள். இப்போது புரிந்து கொண்டீர்கள், நாம் ஆத்மா, சரீரமல்ல. ஆத்மா அழியாதது எனச் சொல்லப்படுகிறது என்றால் நிச்சயமாக அது ஏதோ ஒரு பொருள் தான் இல்லையா? குழந்தைகளுக்கு நல்லபடியாகப் புரிய வைக்கப்பட்டுள்ளது. இனிமையிலும் இனிமையான குழந்தைகளே, யாரைக் குழந்தைகளே, குழந்தைகளே என அழைக்கிறேனோ, அந்த ஆத்மாக்கள் அவிநாசி. இதை ஆத்மாக்களின் தந்தை பரமபிதா பரமாத்மா வந்து புரிய வைக்கிறார். இந்த விளையாட்டு கல்பத்தில் ஒரு முறை மட்டுமே நடைபெறுகின்றது. அப்போது பாபா வந்து குழந்தை களுக்குத் தமது அறிமுகம் தருகிறார். நானும் இந்நாடகத்தில் பாகதாரி. எப்படி எனது பாகத்தை நடிக்கிறேன் என்பதும் உங்களுடைய புத்தியில் உள்ளது. பழைய, அதாவது பதீத ஆத்மாவைப் புதிய, தூய்மையானதாக ஆக்குவதற்காக வருகிறார் என்றால் பிறகு உங்களுடைய சரீரமும் கூட அங்கே தூய்மையானதாக இருக்கும். இதுவோ புத்தியில் உள்ளது இல்லையா?

இப்போது நீங்கள் பாபா-பாபா என்று சொல்கிறீர்கள். இந்த பாகம் நடைபெற்றுக் கொண்டுள்ளது இல்லையா? ஆத்மா சொல்கிறது, பாபா வந்து விட்டார் - குழந்தைகளாகிய நம்மை சாந்திதாம் வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்காக. சாந்திதாமத்திற்குப் பின் சுகதாமம். சாந்திதாமத்திற்குப் பிறகு துக்கதாமம் இருக்க முடியாது. புது உலகத்தில் சுகம் என்று தான் சொல்லப் படுகின்றது. இந்த தேவி-தேவதைகள் சைதன்யமாக இருந்து, இவர்களிடம் யாராவது, நீங்கள் எங்கே வசிப்பவர்கள் எனக் கேட்டால் நாங்கள் சொர்க்கத்தில் வசிப்பவர்கள் எனச் சொல்வார்கள். இப்போது இந்த ஜட மூர்த்திகளோ அதுபோல் சொல்ல முடியாது. நீங்களோ சொல்ல முடியும், நாங்கள் அசலில் சொர்க்கத்தில் வசிக்கும் தேவி-தேவதைகளாக இருந்தோம். பிறகு 84 பிறவிச் சக்கரத்தைச் சுற்றி இப்போது சங்கமயுகத்திற்கு வந்துள்ளோம். இது மாற்றலாகிச் செல்வதற்கான புருஷோத்தம சங்கம யுகமாகும். குழந்தைகள் அறிவார்கள், நாம் மிகவும் உத்தம ஆத்மாவாக ஆகிறோம். நாம் ஒவ்வொரு 5000 ஆண்டுகளுக்குப் பிறகும் சதோபிரதானமாக ஆகிறோம். சதோபிரதானமும் கூட நம்பர்வார் என்று தான் சொல்வார்கள். ஆக, இந்த பாகம் முழுவதும் ஆத்மாவுக்குக் கிடைத்துள்ளது. நான் ஆத்மா 84 பிறவிகள் எடுக்கிறேன். நாம் ஆத்மா வாரிசுகள். வாரிசு எப்போதும் ஆண்களாக இருப்பார் கள். பெண்கள் இருப்பதில்லை. ஆக, இப்போது குழந்தைகள் நீங்கள் இதைப் பக்காவாகப் புரிந்து கொள்ள வேண்டும், நாம் ஆத்மாக்கள் அனைவரும் ஆண்கள். அனைவருக்கும் எல்லையற்ற தந்தை யிடமிருந்து ஆஸ்தி கிடைக்கின்றது. எல்லைக்குட்பட்ட லௌகீக தந்தையிடமிருந்து ஆண் குழந்தை களுக்கு மட்டுமே ஆஸ்தி கிடைக்கின்றது. பெண்குழந்தைகளுக்கு அல்ல. ஆத்மா எப்போதும் பெண்ணாகவே ஆகும் என்பதும் கிடையாது. பாபா புரிய வைக்கிறார், ஆத்மாக்களாகிய நீங்கள் சில சமயம் ஆண்களின் சரீரத்தையும் சில சமயம் பெண்களின் சரீரத்தையும் எடுக்கிறீர்கள். இச்சமயம் நீங்கள் அனைவரும் ஆண்கள். அனைத்து ஆத்மாக்களுக்கும் ஒரு தந்தையிடமிருந்து ஆஸ்தி கிடைக்கின்றது. அனைவரும் ஆண் குழந்தைகளே தான். அனைவரின் தந்தை ஒருவர். தந்தையும் சொல்கிறார் - ஹே குழந்தைகளே, ஆத்மாக்கள் நீங்கள் அனைவரும் ஆண்கள். என்னுடைய ஆன்மிகக் குழந்தைகள் நீங்கள். பிறகு

உங்கள் பாகத்தில் நடிப்ப தற்காக ஆண்-பெண் இருவருமே வேண்டும். அப்போது தான் மனித சிருஷ்டியின் விருத்தி ஏற்படும். இவ்விஷயங்களை உங்களைத் தவிர வேறு யாரும் அறிந்திருக்கவில்லை. நாம் அனைவரும் சகோதரர்கள் எனச் சொல்லவோ செய்கிறார்கள். ஆனால் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளவில்லை.

இப்போது நீங்கள் சொல்கிறீர்கள் - பாபா, உங்களிடமிருந்து அநேக தடவை ஆஸ்தி பெற்றிருக் கிறோம். ஆத்மாவுக்கு இது பக்கா (உறுதி) ஆகி விடுகின்றது. ஆத்மா தந்தையை நிச்சயமாக நினைவு செய்கின்றது - ஓ பாபா, இரக்கம் காட்டுங்கள்! பாபா, இப்போது நீங்கள் வாருங்கள். நாங்கள் அனைவரும் உங்கள் குழந்தைகளாக ஆவோம். தேகத்துடன் கூடவே தேகத்தின் அனைத்து சம்மந்தங்களையும் விட்டு நாங்கள் ஆத்மா உங்களை மட்டுமே நினைவு செய்வோம். பாபா புரிய வைத்துள்ளார், தன்னை ஆத்மா என உணர்ந்து தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள். பாபாவிடமிருந்து நாம் ஆஸ்தியை எப்படிப் பெறுகிறோம்? ஒவ்வொரு 5000 ஆண்டுகளுக்குப் பிறகும் நாம் தேவதையாக எப்படி ஆகிறோம்? இதையும் அறிந்து கொள்ள வேண்டும் இல்லையா? சொர்க்கத்தின் ஆஸ்தி யாரிடமிருந்து கிடைக்கின்றது? இதை இப்போது தான் நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். பாபாவோ சொர்க்கவாசி கிடையாது. குழந்தைகளை சொர்க்கவாசி ஆக்குகிறார். அவரே நரகத்தில் தான் வருகிறார். நீங்கள் பாபாவை அழைப்பதும் நரகத்தில் தான்-நீங்கள் தமோபிர தானமாக ஆகும் போது. இது தமோபிரதான உலகம் இல்லையா? சதோபிரதான உலகமாக இருந்தது, 5000 ஆண்டுகளுக்கு முன் இவர்களின் இராஜ்யம் இருந்தது. இவ்விசயங்களை, இந்தப் படிப்பை இப்போது நீங்கள் தாம் அறிந்து கொள்கிறீர்கள். இது மனிதரில் இருந்து தேவதை ஆவதற்கான படிப்பாகும். மனிதரில் இருந்து தேவதை ஆக்குவதற்கு பகவானுக்கு அதிக நேரமாவதில்லை....... குழந்தையான உடனே தந்தையின் வாரிசாகி விட்டார். பாபா சொல்கிறார், ஆத்மாக் களாகிய நீங்கள் அனைவரும் என்னுடைய குழந்தைகள். உங்களுக்கு ஆஸ்தி தருகிறேன். நீங்கள் சகோதர- சகோதரர் கள். வசிப்பதற்கான இருப்பிடம் மூலவதனம் அல்லது நிர்வாணதாமம் (சப்தத்தைக் கடந்த உலகம்) அதை நிராகாரி உலகம் என்றும் சொல்கின்றனர். ஆத்மாக்கள் அனைவரும் அங்கே வசிக்கின்றனர். இந்த சூரிய-சந்திரனையும் கடந்து உள்ளது அந்த உங்களுடைய இனிமையான அமைதியான வீடு. ஆனால் அங்கேயே உட்கார்ந்து விடவோ கூடாது. அங்கே அமர்ந்து கொண்டு என்ன செய்வீர்கள்? அதுவோ ஒரு ஜட நிலை ஆகின்றது. ஆத்மா எப்போது பார்ட்டை நடிக்கின்றதோ, அப்போது தான் சைதன்யமானது எனச் சொல்லப்படும். சைதன்யமாகத் தான் உள்ளது, ஆனால் பார்ட்டை நடிக்க வில்லை என்றால் ஜடமாயிற்று இல்லையா? நீங்கள் இங்கே நின்று கொள்ளுங்கள், கை-காலை அசைக்காதிருந்தால் ஜடம் போல் ஆகிறீர்கள் இல்லையா? அங்கோ இயற்கையான சாந்தி இருக்கும். ஆத்மாக்கள் அங்கே ஜடம் போலவே உள்ளன. நடிப்பை எதையும் அங்கே நடிக்கவில்லை. அழகோ நடிப்பதில் தான் உள்ளது இல்லையா? சாந்திதாமத்தில் என்ன அழகு இருக்கும்? ஆத்மாக்கள் சுகம்-துக்கத்தின் உணர்வுக்கு அப்பாற்பட்டு உள்ளனர். நடிப்பை நடிக்கவில்லை என்றால் அங்கே இருப்பதில் என்ன நன்மை? முதல்-முதலில் சுகத்தின் பாகத்தில் நடிக்க வேண்டும். ஒவ்வொரு வருக்கும் முதலிலேயே நடிப்பின் பாகம் கிடைத்து விடுகின்றது. எங்களுக்கோ மோட்சம் வேண்டும் என்று சிலர் சொல்கின்றனர். நீர்க்குமிழி நீருக்குள் கலந்து விட்டது

என்றால் அவ்வளவு தான், ஆத்மாவே இல்லை என்றாகிறது. எந்த ஒரு பாகத்தையும் நடிக்கவில்லை என்றால் ஜடம் என்று தான் சொல்வார்கள். சைதன்யமாக இருந்து கொண்டே ஜடமாக ஆகிவிட்டால் என்ன நன்மை? தனது பாகத்தை அனைவரும் நடித்தே ஆக வேண்டும். முக்கியமானது ஹீரோ-ஹீரோயின் நடிப்பு எனச் சொல்லப்படுகின்றது. குழந்தைகளாகிய உங்களுக்கு ஹீரோ- ஹீரோயின் என்ற டைட்டில் கிடைக்கின்றது. ஆத்மா இங்கே தன் பாகத்தை நடிக்கின்றது. முதலில் சுகத்தின் இராஜ்யம் செய்கின்றது. பிறகு இராவணனுடைய துக்கத்தின் இராஜ்யத்தில் செல்கின்றது. இப்போது பாபா சொல்கிறார், குழந்தைகள் நீங்கள் அனைவருக்கும் இந்தச் செய்தியைச் சொல்லுங்கள். ஆசிரியராகி மற்றவர்களுக்குப் புரிய வையுங்கள். யார் ஆசிரியராக ஆவதில்லையோ, அவர்களின் பதவி குறைந்த தாக ஆகி விடும். ஆசிரியராக ஆகாமல் யாருக்கும் ஆசிர்வாதம் எப்படிக் கிடைக்கும்? யாருக்காவது பைசா கொடுத்தால் அவர்களுக்குக் குஷி ஏற்படும் இல்லையா? உள்ளுக்குள் புரிந்து கொண்டுள்ளனர், பி.கே. நம் மீது மிகுந்த கருணை காட்டு கின்றனர். நம்மை எதிலிருந்து எதுவாக ஆக்கி விடுகின்றனர்! இவ்வாறே மகிமை ஒரு தந்தைக்குத் தான் செய்கின்றனர் - ஆஹா பாபா, தாங்கள் இந்தக் குழந்தைகள் மூலம் எங்களுக்கு எவ்வளவு நன்மைகள் செய்கிறீர்கள்! யார் மூலமாவது நடைபெறுகிறது இல்லையா? பாபா செய்பவர்-செய்விப்பவர் உங்கள் மூலமாகச் செய்விக்கிறார். உங்களுக்கு நன்மை ஏற்படுகின்றது. ஆக, நீங்கள் பிறகு மற்றவர்களுக்கு நாற்று நட்டு வைக்கிறீர்கள். யார் எப்படி-எப்படி சேவை செய்கின்றனரோ, அவ்வளவு உயர்ந்த பதவி பெறுகிறார்கள். இராஜாவாக ஆக வேண்டுமானால் பிரஜைகளையும் உருவாக்க வேண்டும். பிறகு யார் நல்ல நம்பரில் வருகின்றனரோ, அவர்களும் இராஜா ஆகின்றனர். மாலை உருவாகிறது இல்லையா? தன்னைத் தான் கேட்க வேண்டும், நாம் எந்த நம்பரில் வருவோம்? 9 இரத்தினங்கள் முக்கியமானவை இல்லையா? நடுவில் இருப்பவர் வைரமாக ஆக்குபவர். வைரத்தை நடுவில் வைக்கின்றனர். மாலையில் மேலே பூவும் உள்ளது இல்லையா? கடைசியில் உங்களுக்குத் தெரிய வரும். எத்தகைய முக்கிய மணிகளாக ஆகிறார்கள், அவர்கள் இராஜ பரம்பரையில் வருவார்கள். கடைசியில் உங்களுக்கு அனைத்தும் நிச்சயமாக சாட்சாத்காரம் ஆகும். எப்படி இந்த தண்டனைகள் எல்லாம் பெறுகிறோம் என்பதைப் பார்ப்பீர்கள். ஆரம்பத்தில் திவ்ய திருஷ்டியில் நீங்கள் சூட்சும வதனத்தில் பார்த்தீர்கள். இதுவும் குப்தமாக உள்ளது. ஆத்மா தண்டனைகளை எங்கே பெறுகிறது - இதுவும் டிராமாவில் பதிவு உள்ளது. கர்ப்ப ஜெயிலில் தண்டனைகள் கிடைக்கின்றன. ஜெயிலில் தர்மராஜரைப் பார்க்கின்றனர். எங்களை வெளியில் கொண்டு வாருங்கள் என்று பிறகு சொல்கின்றனர். நோய்கள் முதலியவை ஏற்படு கின்றன. அதுவும் கர்மத்தின் கணக்கு இல்லையா? இவை அனைத்தும் புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களாகும். பாபாவோ நிச்சயமாக சரியானதைத் தான் சொல்வார் இல்லையா? இப்போது நீங்கள் நேர்மையானவர்களாக ஆகிறீர்கள். யார் பாபா விடமிருந்து சக்தி பெறுகிறார்களோ, அவர்கள் தான் நேர்மையானவர்கள் எனச் சொல்லப்படுகிறார்கள்.

நீங்கள் உலகத்தின் மாலிக் (எஜமானர்) ஆகிறீர்கள் இல்லையா? அங்கே எவ்வளவு சக்தி இருக்கிறது! தொந்தரவுகள் முதலியவற்றின் எந்த ஒரு விஷயமும் இருக்காது. சக்தி குறைவு என்றால் எவ்வளவு தொந்தரவுகள் ஏற்படு கின்றன! குழந்தைகளாகிய உங்களுக்கு அரைக் கல்பத்திற்கான சக்தி

கிடைக்கின்றது. பிறகும் கூட நம்பர்வார் புருஷார்த்தத்தின் அனுசாரம் தான். ஒரே மாதிரியான சக்தியை அடைய முடியாது. ஒரே மாதிரியான பதவியும் பெற முடியாது. இதுவும் முதலிலேயே விதிக்கப்பட்டதாகும். டிராமாவில் அநாதியாக விதிக்கப் பட்டுள்ளது. சிலர் கடைசியில் வருகின்றனர், ஓரிரு பிறவிகள் எடுத்த பின் சரீரம் விட்டு விடுகின்றனர். எப்படி தீபாவளியின் போது கொசுக்கள் உள்ளன, இரவில் பிறந்து காலையில் இறந்து விடுகின்றன. அவையோ எண்ணற்றவையாக உள்ளன. முதல்-முதலில் வரும் ஆத்மாக்களுக்கு ஆயுள் அதிகமாக உள்ளது. குழந்தைகளாகிய உங்களுக்குக் குஷி இருக்க வேண்டும் - நாம் மிக அதிக ஆயுள் உள்ளவர்களாக ஆவோம். நீங்கள் முழு பாகத்தையும் நடிக்கிறீர்கள். நீங்கள் எப்படி முழு பாகத்தை நடிக்கிறீர்கள் என்பது பற்றி பாபா உங்களுக்குத் தான் சொல்லிப் புரிய வைக்கிறார். படிப்பின் அனுசாரம் மேலிருந்து பார்ட்டை நடிப்பதற்காக வருகிறீர்கள். உங்களுடைய இந்தப் படிப்பே புது உலகத்திற்கானது. பாபா சொல்கிறார், அநேக தடவைகள் உங்களுக்குப் படிப்பிக்கிறேன். இந்தப்படிப்பு அவிநாசி ஆகி விடுகின்றது. அரைக்கல்பம் நீங்கள் பயனை அனுபவிக்கிறீர்கள். அந்த அழியக்கூடிய படிப்பின் மூலம் சுகமும் அல்ப காலத்திற்குத் தான் கிடைக்கின்றது. இப்போது யாராவது வக்கீலாகிறார் என்றால் பிறகு கல்பத்திற்குப் பிறகு தான் வக்கீலாக ஆவார்கள். இதையும் நீங்கள் அறிவீர்கள் - அனைவருக்கும் என்னென்ன பாகம் இருந்ததோ, அதே பாகத்தைக் கல்ப-கல்பமாக நடித்துக் கொண்டே இருப்பார்கள். தேவதையானாலும் சரி, சூத்திரரானாலும் சரி. ஒவ்வொருவரின் பாகமும் - கல்ப-கல்பமாக நடித்தது போலவே அதே தான் இருக்கும். அதில் எந்த ஒரு வேறுபாடும் இருக்காது. ஒவ்வொருவரும் அவரவர் பாகத்தை நடித்துக் கொண்டே இருக்கின்றனர். இது முழுவதும் உருவாக்கப் பட்ட ஒரு விளையாட்டு. புருஷார்த்தம் பெரிதா, பலன் பெரிதா எனக் கேட்கிறார். இப்போது புருஷார்த்தம் (முயற்சி) இல்லாமலோ பலன் கிடைப்பதில்லை. டிராமாவின் அனுசாரம் புருஷார்த்தத்தினால் பலன் கிடைக்கின்றது. ஆக, சுமை முழுவதும் டிராமாவின் மீது வந்து விடுகின்றது. புருஷார்த்தம் சிலர் செய்கின்றனர், சிலர் செய்வதில்லை. வரவும் செய்கின்றனர், பிறகும் புருஷார்த்தம் செய்வதில்லை என்றால் பலன் கிடைப்பதில்லை. முழு உலகிலும் என்ன நடிப்பு நடைபெறுகின்றதோ, அது முழுவதும் உருவாக்கப்பட்ட டிராமா. ஆத்மாவுக்குள் முதலிலேயே பாகம் விதிக்கப்பட்டுள்ளது - ஆரம்பத்திலிருந்து கடைசி வரை. எப்படி ஆத்மா உங்களுக்குள் 84 பிறவிகளின் பாகம் அடங்கி யுள்ளது, வைரமும் உருவாகின்றது, சோழி போலவும் உருவாகின்றது. இந்த அனைத்து விஷயங் களையும் நீங்கள் இப்போது தான் கேட்கிறீர்கள். பள்ளிக்கூடத்தில் யாராவது ஃபெயிலாகி விட்டால் இவர் புத்தியற்றவர் எனச் சொல்வார்கள். தாரணை ஆவதில்லை, இது வெரைட்டி மரம், வெரைட்டி தோற்ற அமைப்புகள் என்று சொல்லப் படுகின்றது. இந்த வெரைட்டி மரத்தினைப் பற்றிய ஞானத்தை பாபா தான் புரிய வைக்கிறார். கல்ப விருட்சத்தைப் பற்றியும் புரிய வைக்கிறார். ஆலமரத்தின் உதாரணமும் இதைப் பற்றி உள்ளது. அதனுடைய கிளைகள் அதிகம் பரவுகின்றன. குழந்தைகள் புரிந்து கொண்டுள்ளனர், ஆத்மாவாகிய நாம் அழியாதவர்கள். சரீரமோ விநாசமாகி விடும். ஆத்மா தான் தாரணை செய்கிறது, ஆத்மா 84 பிறவிகள் எடுக்கிறது. சரீரமோ மாறிக் கொண்டே செல்கிறது. ஆத்மா அதே தான். ஆத்மா தான் வெவ்வேறு சரீரங்களை எடுத்து பாகத்தை நடிக்கின்றது. இது புது விஷயம் இல்லையா? குழந்தைகளாகிய உங்களுக்கும் கூட இப்போது இந்தப் புரிதல் (விளக்கம்) கிடைத்துள்ளது. கல்பத்திற்கு முன்பும்

கூட இதுபோல் புரிந்து கொண்டிருந்தீர்கள். பாபா வருவதும் கூட பாரதத்தில் தான். நீங்கள் அனைவருக்கும் செய்தி கொடுத்துக் கொண்டே இருக்கிறீர்கள். செய்தி கிடைக்காதவர்கள் என்று யாருமே இருக்க மாட்டார்கள். செய்தியைக் கேட்பது அனைவருக்குமான உரிமையாகும். பிறகு பாபாவிடமிருந்து ஆஸ்தியும் பெறுவார்கள். கொஞ்சமாவது கேட்பார்கள் அல்லவா? பிறகும் கூட பாபாவின் குழந்தைகள் அல்லவா? பாபா புரிய வைக்கிறார் - நான் ஆத்மாக் களாகிய உங்களுடைய தந்தை. என் மூலமாக இந்தப் படைப்பின் முதல், இடை, கடை பற்றி அறிந்து கொள்வதன் மூலம் நீங்கள் இந்தப் பதவியைப் பெறுகிறீர்கள். மற்ற அனைவரும் முக்திதாமம் சென்று விடுவார்கள். பாபாவோ அனைவருக்கும் சத்கதி அளிக்கிறார். பாடுகின்றனர், அஹோ பாபா, உங்கள் லீலை.......... என்ன லீலை? எத்தகைய லீலை? இந்தப் பழைய உலகம் மாறுவதற்கான லீலை. தெரிய வேண்டும் இல்லையா? மனிதர்கள் தான் அறிந்து கொள்வார்கள் இல்லையா? பாபா குழந்தைகளாகிய உங்களுக்குத் தான் வந்து அனைத்து விசயங்களையும் புரிய வைக்கிறார். பாபா ஞானம் நிறைந்தவர். உங்களையும் ஞானம் நிறைந்தவராக ஆக்குகிறார். நீங்கள் நம்பர்வார் ஆகிறீர்கள். ஸ்காலர்ஷிப் பெறக்கூடியவர்கள் ஞானம் நிறைந்தவர்கள் எனச் சொல்லப் படுவார்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே!

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) நாம் ஆத்மாக்கள் ஆண்கள். நாம் பாபாவிடமிருந்து முழு ஆஸ்தி பெற வேண்டும். சதா இதே நினைவில் இருக்க வேண்டும். மனிதரில் இருந்து தேவதை ஆவதற்கான படிப்பைப் படிக்கவும் படிப்பிக்கவும் வேண்டும்.

2) முழு உலகத்திலும் என்ன நடிப்பு (நிகழ்வுகள்) நடைபெறுகிறதோ, அது எல்லாமே உருவாக்கப் பட்ட டிராமா ஆகும். இதில் புருஷார்த்தம் மற்றும் பலன் இரண்டும் அடங்கியுள்ளது. புருஷார்த்தம் (முயற்சி) இல்லாமல் பலன் கிடைக்காது. இவ்விஷயத்தை நல்லபடியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

வரதானம் : எந்த ஒரு சேவையானாலும் சத்திய மனதுடன் மற்றும் ஈடுபாட்டுடன் செய்யக்கூடிய சத்திய சேவாதாரி ஆகுக!

சேவை எதுவானாலும் அதை மனதார ஈடுபாட்டுடன் செய்யப்பட்டால் அதற்கு 100 மதிப்பெண்கள் கிடைத்துவிடும். சேவையில் எரிச்சல் இருக்கக் கூடாது, சேவை காரியத்தை முடிப்பதற்காக செய்யக் கூடாது. உங்களுடைய சேவையே சீர்குலைந்ததை சரி செய்விப்பது, அனைவருக்கும் சுகம் கொடுப்பது, ஆத்மாக்களை தகுதியாகவும் யோகியாகவும் ஆக்குவது, அபகாரிகளுக்கும் உபகாரம் செய்வது. சரியான நேரத்தில் அனைவருக்கும் துணை மற்றும் சகயோகத்தை கொடுப்பது போன்ற இப்படிப்பட்ட சேவை செய்பவர்கள் தான் சத்திய ஆன்மிக சேவாதாரிகள்

சுலோகன்: தூய்மைதான் பிராமண வாழ்க்கையின் புதுமையாகும், இதுதான் ஞானத்தின் அடித்தளமாகும்.